Registered as a News Paper

பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஐப்பசி 03 | (19 - 10 - 1992) | திங்கட்கிழமை | ஓசை 244

19-10-1992

## பெரும் நிதி நெருக்கடியில் நான்கு தனியார் வங்கிகள்

கொழும்பிலுள்ள நான்கு தனியார் வங்கிகள் நிதிப் பற்றாக்குறை காரணமாக நீண்ட காலக் கடன் உதவியை வழங்க முடியாத நிலையில் உள்ளன. நிதி நெருக்கடி காரணமாக 200 ஆடைத் தொழிற்சாலைகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் தாம் நீண்டகாலக் கடனுதவியை வழங்க முடியாதுள்ளதாக நான்கு வங்கிகளும் நிதி அமைச்சின் செயலாளர் எஸ் பாஸ்கரலிங்கத்துக்கு அறிவித்துள்ளன. வங்கி நிர்வாகம் மாற்று யோசனைகளையும் தெரிவித்துள்ளன. மாற்று யோசனைகள் பற்றிய விபரங்கள் இரகசியமாகவே வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை, அரசு வங்கிகளான மக்கள் வங்கியும், இலங்கை (4 ம் பக்கம் பார்க்க)

# 5 குண்டுவீச்சு விமானங்கள் அனர்த்தம்

# கொக்குவிலில் காலையில் கோர சம்பவம்

## பெண்மணி பலி: 6 பேர் காயம்

## 8 வீடுகள் முற்றாக நாசம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா விமானப்படையின் ஐந்து சியாமாச்செட்டி விமானங்கள் நேற்றுக் காலை கொக்குவிலிலுள்ள நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் பெரும் அனர்த்தத்தை விளைவித்தன. இந்த விமானங்கள் நடத்திய அகோரத் தாக்குதலில் ஒரு பெண் பலியானார். மேலும் ஆறு பேர் காயமடைந்தனர். எட்டு வீடுகள் முற்றாகச் சேதமடைந்ததுடன் 20 இற்கு மேற்பட்ட வீடுகள் பாதிப்புக்குள்ளாகின.

நேற்று அதிகாலை 6-30 மணியளவில் நிரையாக வந்த ஐந்து குண்டுவீச்சு விமானங்களே இவ் அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளன, சுமார் ஐந்து நிமிட நேரத்தில் அடுத்தடுத்து ஒன்பது குண்டுகளை இவை வீசித் தள்ளின.

இக்குண்டு வீச்சு தாக்குதலின் போது அவ்விடங்களில் இருந்த மக்களுக்கு பதுங்கு குழிக்குச் செல்லக்கூட அவகாசம் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

### ஒரு பெண் பலி 6 பேர் காயம்

இத்தாக்குதலின் போது நயினாதீவைச் சேர்ந்தவரும் நந்தாவில் அம்மன் கோவிலடியில் வசித்தவருமான விஜய இராமலிங்கம் கமலேஸ்வரி (வயது 49) என்னும் பெண் தலையில் காயமடைந்து அவ்விடத்திலேயே பலியானார் இவர் பதுங்குகுழிக்குள் இறங்க முட்பட்ட சமயம் இவ் அனர்த்தம் நிகழ்ந்தது.

மேலும் அவ்விடத்தைச் சேர்ந்த வ. சியாமளா (வயது 14), எஸ். விசாலாட்சி (வயது 64), கு. சண்முகநாதன் (வயது 47), தர்மலிங்கம் தர்மலட்சுமி(வயது 18), மகாதேவா சொர்ணம்மா (வயது 48) ஆகியோர் உட்பட ஆறு பேர் காயமடைந்தனர். இவர்களுக்கு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

### பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள் நாசம்

குண்டுவீச்சு தாக்குதல்களில் வீடுகள், வீட்டுத்தளபாடங்கள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன, உடமைகளை இழந்த மக்கள் தமது இழப்புகள் பற்றி சோகத்துடன் எமது நிருபரிடம் முறையிட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)



கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில் சிறிலங்கா விமானப் படையினரின் குண்டு வீச்சுக்கு அநியாயமாக பலியாகிய பெண்மணியின் உடலுக்கு அருகே அவரது உறவினர்கள் கதறியழுத வண்ணம் உள்ளனர்.

## கண்விழித்து பார்த்தபொழுது வீட்டை புகைமண்டலம் மூடியிருந்தது

### காயங்களுடன் தப்பியவர் தகவல்

(நமது நிருபர்)

மேற்படி குண்டு வீச்சு சம்ப ... த்த அதிர்வுடன் குண்டுகள்

## புலிகளுக்கு எதிரான போருக்கு

மணியளவில் நிரையாக வந்த ஐந்து குண்டு வீச்சு விமானங்களே இவ் அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளன, சுமார் ஐந்து நிமிட நேரத்தில் அடுத்தடுத்து ஒன்பது குண்டுகளை இவை வீசித் தள்ளின.

இக்குண்டு வீச்சு தாக்குதலின் போது அவ்விடங்களில் இருந்த மக்களுக்கு பதுங்கு குழிக்குச் செல்லக்கூட அவகா

தெரிவிக்கப்படுகிறது.

### ஒரு பெண் பலி 6 பேர் காயம்

இத்தாக்குதலின் போது நயினாதீவைச் சேர்ந்தவரும் நந்தாவில் அம்மன் கோவிலடியில் வசித்தவருமான விஜய இராமலிங்கம் கமலேஸ்வரி (வயது 49) என்னும் பெண் தலையில் காயமடைந்து அவ்

இவர் ... முட்பட்ட சமயம் இவ் அனர்த்தம் நிகழ்ந்தது.

மேலும் அவ்விடத்தைச் சேர்ந்த வ. சியாமளா (வயது 14), எஸ். விசாலாட்சி (வயது 64), கு. சண்முகநாதன் (வயது 47), தர்மலிங்கம் தர்மலட்சுமி(வயது 18), மகாதேவா சொர்ணம்மா (வயது 48) ஆகியோர் உட்பட ஆறு பேர் காய

சாலையில் சிகிச்சை அளிக்கப் பட்டது

### பல லட்சம் பெறுமதியான சொத்துக்கள் நாசம்

குண்டுவீச்சு தாக்குதல்களில் வீடுகள், வீட்டுத்தளபாடங்கள் உட்பட பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன, உடமைகளை இழந்த மக்கள் தமது இழப்புகள் பற்றி சோகத்துடன் எமது நிருபரிடம் முறையிட்டனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)



கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவிலடியில் சிறிலங்கா விமானப் படையினரின் குண்டு வீச்சுக்கு அநியாயமாக பலியாகிய பெண்மணியின் உடலுக்கு அருகே அவரது உறவினர்கள் கதறியழுத வண்ணம் உள்ளனர்.

# கண்விழித்து பார்த்தபொழுது வீட்டை புகைமண்டலம் மூடியிருந்தது

## காயங்களுடன் தப்பியவர் தகவல்

(நமது நிருபர்)

திடீரென விரைந்து வேகமாக பதிந்து வந்த விமானத்திலிருந்து இரண்டு கறுப்பு நிற பொருள்கள் வருவதைக்கண்டு நிலத்தில் வீழ்ந்து படுத்த போது பேரதிர்வுடன் குண்டுகள் வெடித்தன.

இவ்வாறு நேற்று கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் அருகே சிறிலங்கா விமானப்படையின் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்திய தாக்குதல்களில் இருந்து சிறு காயத்துடன் உயிர் தப்பிய சண்முகநாதன் என்பவர் நமது நிருபருக்கு தெரிவித்தார்.

மேற்படி குண்டு வீச்சு சம்பவம் பற்றி அவர் மேலும் விளக்கிக் கூறுகையில் ஐந்து குண்டுவீச்சு விமானங்கள் எனது வீட்டை மையமாகக் கொண்டு சுற்றுவதை முற்றத்தில் நின்று பார்த்துக்கொண்டிருந்தேன். அப்போது திடீரென ஒரு விமானம் எமது வீட்டை நோக்கி வேகமாக இறங்கிவருவதை அவதானித்த சில வினாடிகளில் அதிலிருந்து இரண்டு கறுப்புநிற பொருள்கள் ஆடி ஆடி வருவதைக் கண்டேன். உடனே நிலத்தில் வீழ்ந்து குப்புற படுத்தேன். அவ்வேளை பலத்த அதிர்வுடன் குண்டுகள் வெடித்தன.

கண்ணை விழித்து பார்த்த போது வீடே தெரியாத அளவிற்கு ஒரே புகைமண்டலமாக காட்சியளித்தது. எழுந்து வீதியை நோக்கி ஓடினேன். சிதறிய ஓடுகளையும் தாண்டி ஓடிக்கொண்டிருக்கும்போது அயல் வீடுகளில் குழந்தைகளினதும் பெண்களினதும் கூக்குரல்கள் கேட்டவண்ணமிருந்தன. சிறிது தூரம் ஓடியபின்னரே நெற்றியிலிருந்து இரத்தம் வெளிவருவதை உணர்ந்தேன். இதன் பின்,

(4-ம் பக்கம் பார்க்க)

# குண்டுவீச்சு அதிர்விலிருந்து குழந்தைகள் மீளவில்லை

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் அருகில் நேற்று சிறிலங்கா குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய ஆகோரக் குண்டுவீச்சுத் தாக்குதல்களை அடுத்து அப்பகுதிகளில் வசித்துவரும் பல சிறுவர்களும் குழந்தைகளும் உளரீதியான பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர். அந்த அதிர்ச்சியிலிருந்து அங்குள்ள பிள்ளைகள் இன்னமும் மீளவில்லை.

இத்தாக்குதலால் பாதிக்கப்பட்ட இடங்களை கடந்த இரவு நேரில் சென்று பார்வையிட்டபோது இதனை அவதானிக்க முடிந்தது. வட்டமிடாமல் திடீரென குண்டுகள் வீசப்பட்டதால் பதுங்கு குழிக்குள் கூட ஓடமுடியவில்லை என பலரும் தெரிவித்தனர் குறிப்பிட்ட பகுதிக்குள்ளேயே அனைத்து குண்டுகளும் அடுத்தடுத்து வீழ்ந்து வெடித்ததில் தமது பிள்ளைகள் பிரமை பிடித்தவர்கள்போல் காணப்படுவதாகவும் சிலர் பதற்றமடைந்துகாணப்படுவதாகவும் பலருக்கு காய்ச்சல் கூட ஏற்பட்டுள்ளதாகவும் பெற்றோர் தெரிவித்தனர் [ச]

## குண்டுவீச்சு விமானம் மீது எதிர்த்தாக்குதல்கள்

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோவில் பகுதியில் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்திய விமானங்கள் மீது கடும் எதிர்த் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இவ் எதிர் தாக்குதல்களை அடுத்து குண்டு வீசிக் கொண்டிருந்த விமானங்கள் பலாலிப் பக்கமாக ஓடி மறைந்தன.

## கலிபர் சூட்டினால் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் விளானை நோக்கி ஷெல் மற்றும் 50 கலிபர்த் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் ஓர் இளைஞர் படுகாயமடைந்தார்.

நேற்று மாலை 2.00 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது இச் சம்பவத்தில் 17 வயதுடைய த.தங்கேஸ்வரன் (திலீபன் வீதி உரும்பராய்) என்கின்ற இளைஞரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் (பா)

## மீட்பு நிதி சேகரிப்பு

தீவகம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தோருக்கான மீட்பு நிதி சேகரிப்பு நாளை பிற்பகல் 2-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை வண்ணார் பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம் பெறும் என விடுதலைப்புலிகள் நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

# புலிகளுக்கு எதிரான போருக்கு இந்திய இராணுவ உதவி அவசியம்

## 'சண்டே ரைம்ஸ்' அரசுக்கு ஆலோசனை

(கொழும்பு)

புலிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கொழும்புப் பத்திரிகைகள் பல அரசை வலியுறுத்தியுள்ளன.

இந்தியா-சிறிலங்கா ஆகிய இரு நாடுகளுக்கும் பொது எதிரி புலிகள் என்ற வகையில், புலிகளை ஒடுக்க இரு நாடுகளும் கூட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சண்டே ரைம்ஸ் பத்திரிகை கருத்துத் தெரிவித்திருக்கிறது புலிகளுக்கு எதிராக மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள மக்களுக்கு ஆயுதம் வழங்க வேண்டும் என்றும் அப் பத்திரிகை கூறுகிறது.

கிழக்கிலங்கையிலுள்ள பல இன மக்களைப் பாதுகாப்பது அரசின் கடமை என்றும், அதற்காக அரசு புலிகளுக்கு எதிராகப் போரிட வேண்டும் என்று சண்டே ஐலண்ட் எழுதியுள்ளது.

சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் பொலநறுவைக் கொலைகளைக் கண்டிக்க முன்வர வேண்டும் என்று சண்டே ஒப்சேர்பர், டெயிலி ஒப்சேர்பர் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

மனித உரிமை மீறலுக்கு அரசு மாத்திரமே குறை கூறுவது நியாயமாவெனக் கேள்வி எழுப்பும் சண்டே ஒப்சேர்பர், இந்தக் கொலைகள் குறித்துப் புலிகளைக் கண்டிக்கவோ அல்லது புலிகளுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றோ கருத்துத் தெரிவிக்கவில்லை.

## வீரவணக்கம்



2-ம் லெப். அருட்செல்வம்

2-ம் லெப். அருட்செல்வம் (நிசாபரன்- கணபதிப்பிள்ளை சின்னவன் விலாவெட்டுவான், மட்டக்களப்பு) 18-10-1992 அன்று சுகயீனம் காரணமாக சாவடைந்தார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத்தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பாக்கு நீரிணையில்

## புலிகளின் நடவடிக்கை கட்டுப்படுத்தப்பட்டு விட்டது

### இந்திய கடற்படை அதிகாரி

(சென்னை)

கடற்படை, காவற்படை, சுங்கத்துறை ஆகிய முத்தரப்பினரின் ஒத்துழைப்புடன் பாக்குநீரிணைப் பகுதியில் புலிகளின் நடமாட்டம் கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாக இந்திய கடலோர காவல் படையின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கொமடோர்கார்னேடோ தெரிவித்தார்.

கரையோரக் காவற்படையைச் சேர்ந்த 'விக்ரம்' என்ற கப்பல் பாக்கு நீரிணையில் இடைவிடாத கண்காணிப்பை மேற்கொண்டு வருவதாகவும் இது கச்சதீவுக்கு அருகிலும் கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

### மட்டக்களப்பு தொண்டர் ஆசிரியர் நியமனம்

# சந்தேகத்திற்குரியவர்களென 328 பேர்களின் விண்ணப்பம் ரத்து

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர் நியமனத்துக்கென விண்ணப்பித்திருந்த 328 பேரின் விண்ணப்பங்கள் அவர்கள் சந்தேகத்துக்குரியவர்கள் என தெரிவிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்நியமனத்துக்கென 900 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 100 பேருடைய விண்ணப்பங்கள் வேறு காரணங்களுக்காக நிராகரிக்கப்பட்டன. 472 பேருக்கு நியமனம்வழங்கப்பட்டது.ஏனைய 328 பேருக்குசுற்று நிருபத்தின் பிரகாரம் ஆசிரியர்களாகச் சேவை செய்ய முடியாதவர்கள், சந்தேகத்துக்குரியவர்கள் என தெரிவிக்கப்பட்டு அவர்களுடைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களிடையே தொண்டர் ஆசிரியர் நியமனம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

**கனிவளம் பெருக்கி பிணிதனைக் குறைப்போம்**

# வரி விளம்பரம்


## கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

## தரன் ஸ்ருடியோ

குறைந்த சலார் குறித்த நேரம் தீபாவளித் தினத்தை முன்னிட்டு 9-10-92,27-10-92 வரை சகலவித போட்டோ மற்றும் வேலைகட்கு 189, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (3334)

## நடிக்கிறீர்களா?

'எனது கெட்டிக்காரர்கள்' முதலாம்பிள்ளை,30/- நூல்களிலுள்ள 19 நாடகங்களையும் நடிக்கிறீர்களா? என்னையும் கலந்தாலோசியுங்கள். நடிக்கும் முறை சொல்லித்தருவேன். அராலியூர் சு தாம்பிள்ளை 30, கடைச்சாமிவீதி, நீராவியடி யாழ்ப்பாணம். (3212)


## அரையாண்டுப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி இரண்டாம் அரையாண்டுப் பரீட்சை- 1991 நவம்பர் மாதம் 21,22.28, 29ஆம் திகதிகளில் நடைபெறும்.

---

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்
வலி-வடக்குப்பிரிவு

## விசேட பொதுக்கூட்ட அறிவித்தல்

வலி-வடக்குப் பிரிவின் மேற்படி கூட்டம் புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்காக, எதிர்வரும் 01-11-92 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு மல்லாகம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

வலி வடக்குப் பிரிவுத் தலைவர் பதவிக்கான நியமனப் பத்திரங்கள் 26-10-9! முற்பகல் 9-00 மணி தொடக்கம் 27-10-92 பிற்பகல் 4-00 மணி வரை வலி வடக்குப் பிரிவுக் காரியாலயத்தில் ஏற்றுக் கொள்ளப்படும்.

இதற்கான படிவத்தை வலி வடக்குப் பிரிவுக் காரியாலயத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். நியமனப் பத்திரங்களை 28-10-92 முற்பகல் 9-00 மணி தொடக்கம் பிற்பகல் 4-00 மணிவரை வலி வடக்குப் பிரிவுக் காரியாலயத்தில் வாபஸ் பெற்றுக் கொள்ளலாம்.

17-09-92ஆம் திகதிவரை அங்கத்துவப் பணம் செலுத்தியவர்கள் மாத்திரம் மேற்படி கூட்டத்தில் பங்குபற்றத் தகுதியுடையவர்களாவர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/5246)

கௌரவ செயலாளர்

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1974
—
03
—

மறைவு
199ȷ
—
10
—

---

# ஈராண்டு நினைவஞ்சலி



## மேஜர் அன்ரனி

(கனகசூரியம் சிறி)

கல்முனை, அம்பாறை

பிறப்பு :
**24-09-1964**

வீரச்சாவு
**19-10-1990**

ஈழத்தின் தெற்கிலே
இன்னுமொரு புலிவீரன்
மாவீரனாகி விட்டான்...
விடுதலை வீரனாக
வீறுகொண்டு களம் சென்று
உடற்பலத்தை உரமாக்கி
சரித்திரத்தில் இடம் பிடித்து
ஈராண்டு ஓடி
இருண்டு மறைந்ததென்ன..
அம்பாறை மாவட்ட
அருந்தவப் புதல்வனே
கல்முனை ஈன்றெடுத்த
களப் புலிதான் அன்ரனி...
செருக்குடன் சிங்களவன்
எம் இடத்தை அழித்திடவே

சோதனை தர வந்த
சோம்பேறிக் கூட்டத்திற்கு
வேதனை பல கொடுத்து
சாதனை பல படைத்தான்.,
அநியாயம் எங்காவது
அரங்கேறும் வேளையிலே
சூறாவளியாய் சுழன்று - இவன்
எதிரியை சுக்கு நூறாக்கிடுவான்.,
கிழக்கிலே இவன் புகழ்
கிளை விட்டு வளர்ந்தது - பின்
வடக்கிலே இறந்த - புது
வடிவமைக்க வந்தவன்..
பலாலியின் எல்லையிலே
தமிழ் மறவன் தனிவீரம்
புறமுதுகு காட்டாமல்

---

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரஜனனம்
08 - )6 - 1965

வீரச்சாவு
19 - 1ȷ 1990

பலாலி நேரடி மோதலில் வீரச்சாவடைந்த

### 2-ம் லெப். சதீஸ்

(வேலும்மயிலும் குணசீலன்)

வரிப்புலி படையினில் அணிசேர்ந்து - தமிழை
பழித்தவர் தலையை நிலம் சாய்த்து
சரித்திரமாகிய எங்கள் சதீஸ் - உன்
நினைவு என்றுமே மாறாது

குடும்பத்தினர்

நெடியகாடு,
வல்வெட்டித்துறை (3468)

---

## நினைவு கூருகின்றோம்...

**1992-10-19**

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் முள்ளியவளைப் பகுதியில், இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**பாஸ்கரன்** (மார்க்கண்டு இலங்கேஸ்வரன் நடுப்பிரப் பந்திடல், தபலகாமம் - திருக்கோணமலை)

யாழ் கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சசி** (பொன்னுச்சாமி பாலசிங்கம் சோழங்கன், கரணவாய், கரவெட்டி - யாழ்.)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய -

★ **சின்னையா மகேந்திரன்** (கதிரவெளி வாகரை - மட்டக்களப்பு)

கொட்டடி, ஆனைக்கோட்டை, கொக்குவில், இராசபாதை, உரும்பராய், கோப்பாய், வசாவிளான் ஆகிய பகுதிகளில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த தம்பதிகள், இவர்களது 7 வயது மகன், உரும்பராயைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் மூவர், மற்றும் ஒரு மாணவி உட்பட 24 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேசன் ஜெயசக்தி'யின் 3 ஆம் நாள் அப்பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் குட்டி/அலெக்ஸ்** (அம்மையப்பிள்ளை கிருஸ்ணராஜா - கிருஸ்ணராஜா வீதி, பருத்தித்துறை- யாழ்.)

**அனுசன்** (கிருஷ்ணன் தங்கவேலு - வவுணைத்தம்ப வீதி, குரும்பசிட்டி - யாழ் )

**2-ம்லெப். சீனன்** (சற்குரு சதீஸ், சதீஸ்வீதி, நீர்வேலி வடக்கு - யாழ் )

**லெப். பேணாட்** (அல்பிரட் கலியுகக்கண்ணன் -

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/5246) கௌரவ செயலாளர்

## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1974 — 03 — 08

மறைவு 1990 — 10 — 19

**2-ம் லெப்டினன்ட் சுகந்தன்**

[இராசரத்தினம் சிவனேந்திரராஜா]

உறவுகளைப் பிரிந்து - பாச
உணர்வுகளுக்கு வரம்பு கட்டி
உண்மை உலகம் ஒன்று
உயிர்க்க வேண்டுமென்பதற்காக
உன் உயிரை
அர்ப்பணித்தாயோ
சுகந்தா!

முல்லைத்தீவு,
கள்ளப்பாடு,

அன்புத்தம்பி, தங்கை, அம்மா,
அப்பா, உற்றார், உறவினர்கள்.
(3480)

## மேஜர் அன்ரனி

**(கனகசூரியம் சிறி)** கல்முனை, அம்பாறை

பிறப்பு :
**24-09-1964**

வீரச்சாவு
**19-10-1990**

ஈழத்தின் தெற்கிலே
இன்னுமொரு புலிவீரன்
மாவீரனாகி விட்டான்...
விடுதலை வீரனாக
வீறுகொண்டு களம் சென்று
உடற்பலத்தை உரமாக்கி
சரித்திரத்தில் இடம் பிடித்து
ஈராண்டு ஓடி
இருண்டு மறைந்ததென்ன..
அம்பாறை மாவட்ட
அருந்தவப் புதல்வனே
கல்முனை ஈன்றெடுத்த
களப் புலிதான் அன்ரனி..
செருக்குடன் சிங்களவன்
எம் இடத்தை அழித்திடவே
ஆரம்பித்த வேளையிலே
புனித பயணத்தில் சேர்ந்தான்..
வீர விளையாட்டில் - இவர்
விசேட பயிற்சி பெற்றதனால்
மாவட டராணுவப் பொறுப்பெடுத்து
மலைபோல - எதிரிகள்
தலைகள் பல கொய்தான்..
தாக்குதல் திட்டங்களில்
தன்னிகரற்று திகழ்ந்து
கண்ணிவெடி பல வைத்து
எதிரியைப் பறந்தோடச் செய்தான்..
எம்மக்கள் துன்பங்களை
தன் துன்பம் என எண்ணி
இரக்கமாக வாழ்ந்து - பல
இதயங்களை வென்றான்..

சோதனை தர வந்த
சோம்பேறிக் கூட்டத்திற்கு
வேதனை பல கொடுத்து
சாதனை பல படைத்தான்.,
அநியாயம் எங்காவது
அரங்கேறும் வேளையிலே
சூறாவளியாய் சுழன்று - இவன்
எதிரியை சுக்கு நூறாக்கிடுவான்.,
கிழக்கிலே இவன் புகழ்
கிளை விட்டு வளர்ந்தது - பின்
வடக்கிலே இசைந்து - புது
வடிவமைக்க வந்தவன்..
பலாலியின் எல்லையிலே
தமிழ் மறவன் தனிவீரம்
புறமுதுகு காட்டாமல்
நெஞ்சிலே குண்டேந்தி..
சில நாள் காத்திருந்து
எம் கண்கள் புனலாக
எம்மை விட்டு சென்றுவிட்டான்..
மண்மீட்புப் போரிலே
மனிதர்கள் அழியலாம் - ஆனால்
மாணிக்கமான - பல
மனித நேயங்கள் அழியாது,.
கால காலமாக - இவை
எம் ஈழ மக்களால்
இரை மீட்டப்பட்டு வரும்
அந்த வரிசையிலே
இவ் வீரன் ஞாபகங்கள்
என்றென்றும் எங்களது
எண்ணங்களில் நிறைந்திருக்கும்.

(சி5243) — மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட போராளிகள்


## தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு சகாய விலை...

**நவநாகரிக டிசைன்களில்...**

நாகரிக உலகின் ★ நங்கையர் ★ ஆடவர் ★ சிறுவர்கள் ★ மழலைகள்

அனைவருக்கும் . . . .

**வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட...**

★ ஒபிள் ஸ்கேட் & பிளவ்ஸ் ★ சாறிவகைகள் ★ துணிவகைகள்
★ றெடிமேட் ஜீன்ஸ் ★ சூட்டிங்ஸ் ★ சேட்டிங்
★ பேபி சூட் ★ சிறுவர் சிறுமியர் ஆடைகள்

**அத்தனையும் ஒரே இடத்தில் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்**

**உங்கள் நல்வரவை நாடும்**

# லலிதா புடைவை மாளிகை

**இல. 5, 6, நவீன சந்தை — யாழ்ப்பாணம்.**

(சி-5216)


வாகரை - மட்டக்களப்பு)

கொட்டடி, ஆனைக்கோட்டை, கொக்குவில், இராசபாதை, உரும்பராய், கோப்பாய், வசாவிளான் ஆகிய பகுதிகளில் இந்தியப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது படுகொலை செய்யப்பட்ட கொட்டடியைச் சேர்ந்த தம்பதிகள், இவர்களது 7 வயது மகன், உரும்பராயைச் சேர்ந்த ஒரே குடும்பத்தில் மூவர், மற்றும் ஒரு மாணவி உட்பட 24 தமிழர்கள்.

1990 ஆம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட 'ஒப்பரேசன் ஜெயசக்தி'யின் 3 ஆம் நாள் அப்பகுதியில் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் குட்டி/அலெக்ஸ்** (அம்மையப்பிள்ளை கிருஸ்ணராஜா - கிருஸ்ணராஜா வீதி, பருத்தித்துறை- யாழ்.)

**அனுசன்** (கிருஷ்ணன் தங்கவேலு - வவுணைத்தம்ப வீதி, குரும்பசிட்டி - யாழ் )

**2-ம்லெப். சீனன்** (சற்குரு சதீஸ், சதீஸ்வீதி, நீர்வேலி வடக்கு - யாழ் )

**லெப். பேணாட்** (அல்பிரட் கலியுகக்கண்ணன் - நாவற்கோவில் யாழ்.)

**சின்னமணி** (ஏகாம்பரம் ஜெயந்தன் செல்வபுரம், உரும்பராய் தெற்கு - யாழ்.)

**அமுதன்** (கதிரவேலு துரைராசா அன்னங்கை, உரும்பராய் - யாழ் )

இதே நடவடிக்கையின் போது கட்டுவன் பகுதியில், ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**ஆர்த்தி** (கோமதி தம்பாப்பிள்ளை ஆரையம்பதி - மட்டக்களப்பு)

**மூவின்** (இராசரத்தினம் மோகானந்தன் சித்திர மேழி. இளவாலை- யாழ்)

இதே நடவடிக்கையின் போது வசாவிளான் பகுதியில், ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய-

**மேஜர் அன்ரனி** (கனகசூரியம் சிறி அம்மன் கோயிலடி,கல்முனை -அம்பாறை)

**2-ம் லெப். சுகந்தன்** (இராசரத்தினம் சிவனேந்திரராசா கள்ளப்பாடு- முல்லைத்தீவு)

காங்கேசன்துறைப் பகுதியில்,இதே நடவடிக்கையின் போது ஏற்பட்ட சமரில் வீரச்சா வெய்திய-

**பற்றீசியா** (தெய்வமொழி குணம் முள்ளியவளை- முல்லைத்தீவு)

காங்கேசன்துறைப் பகுதியில், 'ஒப்பரேசன் ஜெயசக்தி, நடவடிக்கையின் போது சிறிலங்காப் படையினர் வெளியேற முயன்ற சமயம் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய

**சேந்தன் \ அப்பன்** (நாகமுத்து யோகராசா - புன்னாலைக் கட்டுவன் - யாழ்)

**2 - ம் லெப். ரதீஷ்** வேலும்மயிலும் குணசீலன் - நெடியகாடு, வல்வெட்டித்துறை - யாழ்)

மணலாறுப்பகுதியில். சிறிலங்காப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய-

**அகஸ்ரின்** (திரவியம் சிவகுமார் - கருவேலன் கண்டல் ஒட்டி சுட்டான் - முல்லைத்தீவு)

யாழ்ப்பாணப் பகுதியில் எதிர் பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் எமைப்பிரிந்த-

**பாலு** (அருளம்பலம் ரவிச்சந்திரன் - கருநாட்டுக்கேணி - மணலாறு)

மல்லாகம் பகுதியில், சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட கைக்குழந்தைகள், பெண்கள் உட்பட 6 தமிழர்கள்

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்**

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5245)

## சிந்தனைக்கு

மற்றவர் அனுபவத்தை எவரும் பயன்படுத்துவதில்லை சொந்த அனுபவம் ஒருவருக்குக் கிட்டும்போது அதைப் பயன்படுத்துவதற்குள் காலம் கடந்து விடுகிறது.

நத்தேனியல்ஹாத்தார்ன்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 19-10 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2303
த. பெ. எண் - 05

# சந்தேகமில்லை

"தமிழரின் தேசிய இனப்பிரச்சினைத் தீர்விற்கென பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் மங்களமுனசிங்க முன்வைத்திருக்கும் தீர்வுத் திட்டம் தமிழர் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானதாக இல்லை என்பதோடு ஏமாற்றம் அளிப்பதாகவும் உள்ளது" இவ்வாறு கொழும்பிலுள்ள தமிழ்க் குழுவின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் "இனப்பிரச்சினைக்கு உகந்த தீர்வொன்றைக் காணுமுகமாக பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, சுதந்திரக் கட்சித் தலைவர்கள் கடந்த ஏழாம் திகதி எங்கள் தூதுக்குழுவைச் சந்தித்துப் பேசியபோது பல முன்னேற்றகரமான யோசனைகளைத் தெரிவித்தனர். ஆனால் இப்பொழுது முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளைப் பார்த்தால் சொல்வதொன்றாகவும் செய்வதொன்றாகவும் இருப்பதோடு, எல்லாம் முன்னுக்குப் பின் முரணாகவும் உள்ளது" எனவும் தெரிவித்துள்ளார்.

சிங்களக்கட்சிகளும் அரசாங்கங்களும் இவ்வாறு நடந்துகொள்வதொன்றும் புதுமையானதல்ல, இதேவேளை சிங்கள அரசாங்கங்கள் தமக்கு வாரிவழங்கி விடும் என எதிர்பார்த்து, காத்திருந்து ஏமாற்றப்பட்ட 'தமிழ்ப் பிரதிநிதிகளும்'' இவர்கள் மட்டுமல்ல. இலங்கையின் வரலாறே ஏமாற்றிய சிங்களவரதும் ஏமாற்றப்பட்ட தமிழர்களின் வரலாறாகவே உள்ளது.

இலங்கையில்இன்று நடைபெறும் தமிழர்தேசிய இனவிடுதலைக்கான ஆயுதப் போராட்டமே தமிழர் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டதன் விளைவாகவே எழுந்தது. சிங்களத் தலைவர்களினால் ஒருமுறை என்ன பலமுறை, ஒரு கட்சியால் மட்டுமல்ல இரு பெரும் சிங்களக் கட்சிகளினாலும் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக்கொண்டே வந்தனர். இது காலத்திற்குக் காலம் இடம்பெறும் ஒரு வரலாற்றுச் சம்பவமாகவே மாறிப்போய்விட்டது

ஆனால் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் அதைப் புரிந்துகொண்டதாக இல்லை அதாவது வரலாற்றில் இருந்து அவர்கள் படிப்பினையைப் பெறவில்லை. சிறிலங்கா தலைவர்கள் போடும் பிச்சையில் பிரச்சினை தீர்ந்துவிடும் என எண்ணி

மட்டக்களப்பு

## பொலிஸ் நிலைய பகுதியில் மக்கள் நடமாட தடை

மட்டக்களப்பு பொலிஸ் நிலையம், பொலிஸ் விடுதி ஆகிய இடங்கள் பாதுகாப்பு பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதாக பொலிசார் அறிவித்துள்ளனர்.

பொலிஸ்நிலையம், பொலிஸ் விடுதி ஆகியவற்றுக்குள் பொதுமக்கள் அனுமதியின்றி பிரவேசிப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## கிளிநொச்சிப் பகுதியில் பனம் விதை நடுகை

கிளிநொச்சி காஞ்சிபுரம் பகுதியில 25,000 பனம் விதைகள் நடுகைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது

முதலாவது பனம் விதையை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்க முகாமையாளர் திரு. பா. சிவபாலன் நாட்டி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் இந்நிகழ்வில் சங்கத்தின் தலைவர் திரு. செல்வரட்ணம் கிளிநொச்சிக் கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்

மேலும் இக்கிராமத்தில் பாலர் பாடசாலை, பொது இடங்கள், வீதியோரங்கள், போன்ற இடங்களில் பனை விதைகளை நாட்டியதோடு பனந்தோப்பு ஒன்று அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றுவருகின்றது.

இத்திட்டமானது தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தால் மேற்கொள்ளப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

## மினுவாங்கொட தேடுதலில் ஒரு துப்பாக்கி மீட்பு

(அநுராதபுரம்)

அநுராதபுர இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவப் பொலிஸார் நடத்திய தேடுதலின் போது மினுவாங்கொடவில் ரி-56 ரகத் துப்பாக்கியும் 105 தோட்டாக்களும் வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டன.

இராணுவப் பொலிசுக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டது புலன் விசாரணை தொடர்கிறது. இந்தத் துப்பாக்கியும், மோட்டார் சைக்கிளும் களவுச் சம்பவங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

## வர்த்தக வங்கி செயற்பாடு நாணய சபை மேற்பார்வை

[கொழும்பு]

நாணய சபையின் மேற்பார்வையின் கீழ் வர்த்தக வங்கிகளைக் கொண்டு வரும் முகமாக நாணயச் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவை புதன்கிழமை முடிவு செய்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

வங்கி மேற்பார்வைப் பிரிவின் பணிப்பாளருக்கு வர்த்தக வங்கிகளை மேற்பார்வை செய்ய அதிகாரமளிக்கப்படும் என்றும்,

நாணய சபை பணிப்புரைகளை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

## ஆயுர்வேத வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவக மக்களுக்காக வேலணை பிரதேச சபையின் ஆயுர் வேத வைத்திய சாலை ஒன்று கே.கே.எஸ் வீதியில் இயங்கிவருவதாகவும் தீவக மக்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் வேலணை பிரதேசசபை அறிவித்துள்ளது. (22)

# அதிகாரங்கள் வழங்குமாறு கோரி படைத்தளபதிகள் கடிதம் எழுதவில்லை

## -ரணில் விக்கிரமசிங்கா

(கொழும்பு)

"கடந்த ஆறு மாத காலத்துக்குள் எமக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் அதிகம் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். இதற்கு முன்பும் இப்படி அதிக இழப்புகள் எமக்கு ஏற்பட்டுள்ளன. இது குறித்து பாதுகாப்பு சபை கூட்டத்தில் ஆராயப்படுகின்றன. ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையும் நன்கு ஆராயப்பட்டு திட்டமிடப்பட்டே மேற்கொள்ளப்படுகின்றன."

இவ்வாறு சிறிலங்கா அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் அவர் மேலும் கூறியதாவது:-

இராணுவ நடவடிக்கையை ஆறுமாதத்திற்குள் முடிப்பதற்காக மார்ச் 26 ஆம் திகதி படைத்தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் கூட்டாக கடிதம் எழுதியதை நான் அறியவில்லை. குறித்த ஆறு மாத அவகாசம் முடிந்ததால் தான் ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் மீண்டும் கூட்டுப்படை தலைமையகத்துக்கு அதிகாரம் ஒப்படைக்கப்பட்டதாகக் கூறப்படுவதில் உண்மையில்லை.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்று குறித்த கடிதத்தை பிரசுரித்த போதும் அரசு அதை மறுக்காதது உண்மையே. பத்திரிகைகளில் பல தடவைகள் தவறான செய்திகள் வெளியாகியுள்ளன. எல்லாவற்றையும் நாம் மறுத்துக் கொண்டிருக்கப் போவதில்லை.

வடக்கில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த முக்கிய தளபதிகள் சிலர் கொல்லப்பட்டுள்ளனர். பதவி மாற்றங்கள் சிலவும் நடந்துள்ளன, சிலர் இளைப்பாறவும் நேர்ந்துள்ளது. இந்நிலையில் தான் இராணுவ நடவடிக்கைகளை சீராக்கவே ஜே.ஓ.சி.ம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் ரணில்மேலும் தெரிவித்தார்.

இராணுவ மாற்றங்கள் யாவும் முக்கிய இராணுவ ஆலோசகர்கள் குழுவின் ஆலோசனையுடனும் படைத்தளபதிகளின் இணக்கத்துடனுமே அரசியல்வாதிகளால் மேற்கொள்ளப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.

## சுத்திகரிப்பு பகுதி தனியாக இயங்கும்

(நல்லூர்)

செப்டெம்பர் மாதம் 9-ம் திகதி தொடக்கம் யாழ் மாநகர சபையில் சுத்திகரிப்புபகுதி தனியாக இயங்கி வருவதாகவும் இதன் பொறுப்பாளராக திரு.பொ. ஜெகநாதன் அத்தியட்சகர் சுத்திகரிப்பு என்ற பெயருடன் இயக்கி வருகிறார் எனவும் அறியப்படுகிறது.

முன்பு பதில் சுகாதார பரிசோதகர் என்ற பெயருடன் இயங்கி வந்த சுகாதார மேற்பார்வையாளர்கள் தற்போது சுத்திகரிப்பு பரிசோதகர்எனப் பெயர் மாற்றப்பட்டு இயங்கி வருகிறார்கள்அத்துடன்முன்பு பதில் சுகாதாரப் பரிசோதகர் என்று பெயர் பாவிக்கப்பட்டு வந்ததை யாழ். மாநகரசபை பொது சுகாதாரப் பரிசோதகர் சங்கம் யாழ். மாநகரசபை ஆணையாளரிடம் ஆட்சேபனை தெரிவித்ததன் விளைவாகவே இப் பதவிப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு தனிப் பிரிவாக இயங்க நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டதாகவும் இச் சங்க உறுப்பினர் தெரிவித்தனர்.

## குடும்ப அட்டை புதுப்பிப்பு

[கொழும்புத்துறை]

யாழ். மாவட்டத்தில் சகல கிராம சேவகர்கள் பிரிவிலும் குடும்ப அட்டை புதுப்பிக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

அந்த அந்தக் கிராமசேவகர் பிரிவில் குடும்ப எண்ணிக்கை, இருப்பவர்களின் பெயர் விபரங்கள், தொழில், வசிக்கும் இடம் ஆகிய முழுமையான விபரங்கள் கிராம சேவகர்களினால் கோரப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. [24]

## கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் திரியும் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் வேலைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருகின்றன.

விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்துத் தட்டுப்பாட்டை அடுத்து கட்டாக்காலி நாய்களால் ஏற்படப் போகும் ஆபத்தை முன்னுணர்ந்து நல்லூர் பிரதேச சபையினரால் இந் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. என தெரியவருகின்றது.

இதன்மூலம் பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் மேற்படி பகுதியில் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் மேலும் உள்ள நாய்களை அழிக்கும் வரை நடவடிக்கை தொடரும் என தெரியவருகின்றது. (பா)

## விவசாய சேவை நிலையம் திறப்பு

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளின் சேவையை முன்னிட்டு கிளிநொச்சி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஆதரவில் "விவசாய சேவை நிலையம்" கண்டி வீதி கிளிநொச்சியில் (கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில்) கடந்த புதன் கிழமை காலை 10.00 மணிக்கு அகில உலக கெயர் இஸ்தாபன பிரதிப் பணிப்பாளர் திரு. எம். பத்திநாதன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு விவசாயிகளுக்குத் தேவையான விவசாய உள்ளீட்டுப் பொருள்களான உரம் கிருமிநாசினிகள், நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவிகள், தரமான விதைபொருள்கள் யாவும் நியாய விலையில் விற்பனை செய்யப்பட உள்ளன. (16)

## ராணுவ தளபாட விற்பனை; உக்ரைன்-இந்தியா இணக்கம்

(கீவ்)

ஆயுதங்கள், மற்றும் இராணுவ தளபாடங்கள் விற்ப

க்கம் காணப்பட்டது என்று மொரசோவ் பின்னர் அறிவித்தார்.

## சீன கம்யூனிச சபைகளிலிருந்து ஜனாதிபதி உட்பட 8 பேர் ஓய்வு

புதுமையானதல்ல, இதேவேளை சிங்கள அரசாங்கங்கள் தமக்கு வாரிவழங்கி விடும் என எதிர்பார்த்து, காத்திருந்து ஏமாற்றப்பட்ட 'தமிழ்ப் பிரதிநிதிகளும்'' இவர்கள் மட்டுமல்ல. இலங்கையின் வரலாறே ஏமாற்றிய சிங்களவரதும் ஏமாற்றப்பட்ட தமிழர்களின் வரலாறாகவே உள்ளது.

இலங்கையில்இன்று நடைபெறும் தமிழர்தேசிய இனவிடுதலைக்கான ஆயுதப் போராட்டமே தமிழர் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டதன் விளைவாகவே எழுந்தது. சிங்களத் தலைவர்களினால் ஒருமுறை என்ன பலமுறை, ஒரு கட்சியால் மட்டுமல்ல இரு பெரும் சிங்களக் கட்சிகளினாலும் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுக்கொண்டே வந்தனர். இது காலத்திற்குக் காலம் இடம்பெறும் ஒரு வரலாற்றுச் சம்பவமாகவே மாறிப்போய்விட்டது

ஆனால் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்கள் அதைப் புரிந்துகொண்டதாக இல்லை அதாவது வரலாற்றில் இருந்து அவர்கள் படிப்பினையைப் பெறவில்லை. சிறிலங்கா தலைவர்கள் போடும் பிச்சையில் பிரச்சினை தீர்ந்துவிடும் என எண்ணினர். தமது கைக்கு அதிகாரங்கள் கிட்டும் எனவும் இதன்மூலம் தமிழர்தாயகத்தின் ஆட்சியாளர்கள்தாமே எனவும் கற்பனையும் செய்தனர். இதன் காரணமாக தமிழர் தாயகத்தையே காட்டிக்கொடுக்க முற்பட்டுள்ளனர்.

ஆனால் இன்று சிங்களக்கட்சிகளின் நடவடிக்கைகள் முன்னுக்குப் பின் முரணானதாக இருப்பதாகவும், ஏமாற்றம்அளிப்பதாகவும்அங்கலாய்க்கின்றார்கள். இதேவேளை கடந்த காலங்களில் தமிழ்த் தலைவர்கள் ஏமாற்றப்பட்டபோதும், சிங்கள அரசாங்கங்கள் முன்னுக்குப் பின்முரணாகச் செயற்பட்டபோதும் 'தமிழ் தலைவர்' மட்டுமல்ல, தமிழ் மக்களும் ஏமாற்றமடைந்தார்கள் ஆனால் தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் தமிழ்க்குழுக்களுக்குஏற்பட்ட ஏமாற்றமென்பது தனியாக அவர்களுக்கு மட்டும் உரியதே ஒழிய தமிழ் மக்களுக்கு உரியதொன்றல்ல. ஏனெனில் தமிழ் மக்கள் வரலாற்றுப் பாடத்தை நன்கு கற்றுணர்ந்துள்ளார்கள். அது அவர்களுக்கு புரியவைக்கப்பட்டுமுள்ளது.

ஆனால், இதன் பின்பும் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்விற்கு புலிகள் தடையாக இருப்பதாகவும் புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுக்கு வரவேண்டும் எனக்கோரிக்கை விடுகின்றது. ஆனால்சிங்கள அரசின்சுயரூபம்புலிகளுக்குத் தெரியாததல்ல. அதாவது புலிகள் ஆயுதங்களை கையில் வைத்திருக்கும் போதே, தமிழர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த பட்ச தீர்வைத்தானும் அல்லது தன்னால், பராமரிக்கப்படும் தமிழ் குழுக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய அற்பசலுகைகளைத்தானும் முன்வைக்க சிங்களப்பேரினவாத கட்சிகள் தயாராக இல்லை. இந்நிலையில் புலிகள் ஆயுதங்களைக் கீழேவைத்த பின்னர் தமிழரின் பிரச்சினைக்கு தீர்வு காணலாம் எனக் கூறுவது எந்தளவிற்கு ஏமாற்றுத்தனமானது.

இன்று சிறிலங்கா அரசாங்கத்திற்குப் பிரச்சினையாக இருப்பது புலிகளிடம் உள்ள ஆயுதங்கள் என்பதில் எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது தான். அதே போன்று புலிகளிடம் ஆயுதம் இல்லாது விட்டால் சிங்கள அரசாங்கம்இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்காது, தமிழ் இனத்தையே முழுதாக தீர்த்து வைத்து விடும் என்பதிலும் தமிழர் எவருக்கும் சந்தேகமில்லை.

---

வையின் கீழ் வர்த்தக வங்கிகளைக் கொண்டு வரும் முகமாக நாணயச் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவை புதன்கிழமை முடிவு செய்துள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரான ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

வங்கி மேற்பார்வைப் பிரிவின் பணிப்பாளருக்கு வர்த்தக வங்கிகளை மேற்பார்வை செய்ய அதிகாரமளிக்கப்படும் என்றும்,

நாணய சபை பணிப்புரை

---

## ஆயுர்வேத வைத்தியசாலை

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவக மக்களுக்காக வேலணை பிரதேச சபையின் ஆயுர் வேத வைத்திய சாலை ஒன்று கே.கே.எஸ் வீதியில் இயங்கிவருவதாகவும் தீவக மக்கள் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் வேலணை பிரதேசசபை அறிவித்துள்ளது. (22)

---

யாழ். மாவட்டத்தில் சகல கிராம சேவகர்கள் பிரிவிலும் குடும்ப அட்டை புதுப்பிக்கும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றது.

அந்த அந்தக் கிராமசேவகர் பிரிவில் குடும்ப எண்ணிக்கை, இருப்பவர்களின் பெயர் விபரங்கள், தொழில், வசிக்கும் இடம் ஆகிய முழுமையான விபரங்கள் கிராம சேவகர்களினால் கோரப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. [24]

---

காலி நாய்களால் ஏற்படப் போகும் ஆபத்தை முன்னுணர்ந்து நல்லூர் பிரதேச சபையினரால் இந் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. என தெரியவருகின்றது.

இதன்மூலம் பெருந்தொகையான கட்டாக்காலி நாய்கள் மேற்படி பகுதியில் அழிக்கப்பட்டுவிட்டதாகவும் மேலும் உள்ள நாய்களை அழிக்கும் வரை நடவடிக்கை தொடரும் என தெரியவருகின்றது. (பா)

---

க்கு அகில உலக கெயர் இஸ்தாபன பிரதிப் பணிப்பாளர் திரு. எம். பத்திநாதன் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இங்கு விவசாயிகளுக்குத் தேவையான விவசாய உள்ளீட்டுப் பொருள்களான உரம் கிருமிநாசினிகள், நீர் இறைக்கும் இயந்திரம், தெளிகருவிகள், தரமான விதைபொருள்கள் யாவும் நியாய விலையில் விற்பனை செய்யப்பட உள்ளன. (16)

---

# ராணுவ தளபாட விற்பனை; உக்ரைன்-இந்தியா இணக்கம்

(கீவ்)

ஆயுதங்கள், மற்றும் இராணுவ தளபாடங்கள் விற்பனையில் உக்ரையினும், இந்தியாவும் ஒத்துழைக்க இணங்கியுள்ளன.

உக்ரையினுக்கு விஜயம் செய்துள்ள இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தலைநகர் கீவில் அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் கென்ஸ்டாடின் மொரசோவ் சந்தித்துப் பேசியபோது இந்த இணக்கம் காணப்பட்டது என்று மொரசோவ் பின்னர் அறிவித்தார்.

தமது நாடு ஆயுதங்கள், உதிரிப்பாகங்கள், இராணுவ விநியோகம் என்பவற்றை இந்தியாவிற்கு விற்பனைசெய்யும் என்றும், இந்தியாவிடமிருந்து மருந்துப் பொருள்கள், இராணுவச் சீருடைகள் என்பன போன்றவற்றை பெற்றுக் கொள்ளும் என்றும் மொரசோவ்மேலும் குறிப்பிட்டார்.

# செவ்விந்திய தலைவிக்கு நோபல் சமாதானப்பரிசு

1992 ஆம் ஆண்டிற்கான நோபல் சமாதானப் பரிசு கௌதமாலா நாட்டின் செவ்விந்தியத் தலைவியான ரிகோ பேலாரி மென்சுவ்விற்குகடந்த வெள்ளி வழங்கப்பட்டுள்ளது.

சுதேச மக்களின் மனித உரிமைக்காக அவர் நடத்திய போராட்டத்திற்காகவே இப்பரிசு அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கௌதமாலாவில் இராணுவத்தையும் நிலச் சுவாந்தர்களையும் எதிர்த்ததிற்காக ரிகோ பேலாரின் தாய், தந்தை சகோதரர் ஆகியோர் கொலையுண்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் நாட்டில்

# காங்கிரஸ் ஆட்சி ஏற்படுத்த பாதயாத்திரை ஆரம்பம்

(சென்னை)

தமிழ் நாட்டில் இந்திரா காங்கிரஸ்ஆட்சியைஏற்படுத்த வேண்டும் என்று கோரும் பாதயாத்திரைப் பேரணி நேற்று மதுரை வந்துசேர்ந்தது.

கன்னியா குமரியிலிருந்து தமிழ்நாடு முழுவதும் பாதயாத்திரை புறப்பட்டிருக்கும் இந்த இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் பாத யாத்திரைக் குழுவுக்கு இந்திராகாங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான குமரி அனந்தன் தலைமை தாங்குகிறார்.

தமிழக அரசைக் கவிழ்க்கும் எண்ணம்

# மத்திய அரசிடம் இல்லை வி.என். கார்டியல் அறிவிப்பு

(டில்லி)

தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க அரசைக் கவிழ்க்கவேண்டும் என்ற எண்ணம் மத்திய அரசுக்கோ, காங்கிரஸ் கட்சிக்கோ கிடையாது என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி.என். கார்டியல் புதுடில்லியில் தெரிவித்தார்.

செய்தியாளர்களிடம் அவர் மேலும் கூறுகையில்; அ.இ.அ.தி.மு.கவுடனான காங்கிரஸ் கட்சியின் அரசியலுறவு தொடர்ந்து நீடிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

# சீன கம்யூனிச சபைகளிலிருந்து ஜனாதிபதி உட்பட 8 பேர் ஓய்வு

(பீக்கிங்)

ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் உட்பட எட்டு சிரேஷ்ட சீனத்தலைவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர் சபைகளிலிருந்து ஓய்வு பெற முடிவு செய்திருப்பதாக அரசாங்கப் பத்திரிகை ஒன்று கூறியுள்ளது.

கொள்கை வகுக்கும் பதினான்கு அங்கத்தினர்களடங்கிய பொலிட்பீரோவின் இந்த எட்டு அங்கத்தினர்களும் புதிய மத்திய நிர்வாகக் குழுவில் தங்களைத் தெரிவு செய்ய வேண்டாம் எனவும் கேட்டுள்ளனர்.

சீன முறையின்படி உயர்தர கம்யூனிஸ்ட் கட்சி சபைகளிலிருந்து ஓய்வு பெற்றவர்கள், தங்கள் அரசாங்கப் பதவிகளை இழந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள் தங்கள் செல்வாக்கை அவர்கள் இழந்ததாகவும் கருதப்பட முடியாது.

சீனாவில் 88 வயதானடெங்ஸியா ஒபிங் தற்போது சீன பிரிட்ஜ் சங்கத்தின் கௌரவ தலைவர் பதவியை மட்டுமே வகிக்கிறார். எனினும் நாட்டின் இறுதியான அதிகாரம் அவர் கையிலேயே உள்ளது.

தற்போது எட்டுப் பேர்களும் வயது காரணமாகவே ஓய்வு பெற விரும்புவதாகவும் இவர்கள் அனைவரும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் கூறப்பட்டது.

இதே சமயம் கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸ் மத்திய கமிட்டிக்கு தேர்தல் மூலம் அங்கத்தினர்களைத் தெரிவு செய்ய விருப்பதாகவும், தற்போது 170 பேர் சமிட்டியில் உள்ளனர் என்றும் சீனக்கம்யூனிஸ்ட் கட்சியில் ஐந்து கோடியே பத்து லட்சம் அங்கத்தினர்கள் உள்ளனர் என்றும் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவில் முதியோரின் மரணம் குறைவு

(வாஷிங்டன்)

விஞ்ஞானிகளின் கருத்துக்கு மாறாக வயோதிபர்கள் அதிக காலம் உயிர் வாழ்வதாக சமீப ஆராய்ச்சி ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

மக்கள் அதிக முதுமை அடையும் போது இறப்பு விகிதம் குறைகிறது என பல விஞ்ஞானிகள் இப்போது ஆராய்ந்துள்ளனர்.

அமெரிக்காவில் தற்போது ஒருவரின் சராசரி வயது 75 ஆகும் ஆனால் 85 வயதுக்கு அதிகப்பட்டவர்களின் எண்ணிக்கை அங்கு வேகமாக அதிகரித்து வருகிறது தற்போதுள்ள மூன்றில் ஒரு பங்கு அமெரிக்கர் 85 வயதுக்கு மேல் உயிர் வாழ்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

80, 90, 100 வயதுக்கு மேல் வாழ்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

கர்நாடக மாநிலத்தில்

# பொலிசார் துப்பாக்கிச் சூடு இருவர் பலி; பலர் காயம்

(பெங்களூர்)

கர்நாடக மாநிலத்தில் நேற்று முன்தினம் பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர் கொலையுண்டனர். மற்றும் பலர் காயமடைந்தனர் மாண்டியா மாவட்டம் கடப்புலி கிராமத்தில் திரண்ட கும்பல் ஒன்று கட்டுக்கடங்க மறுத்ததை தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள நேரிட்டதாக காவல்துறையினர் கூறியுள்ளனர்.

ஹாசனிலிருந்து பெங்களூர் நோக்கிச் சென்ற பேருந்துகளை அவர்கள் தடுத்ததாகவும், ஐந்து பேருந்துகளை தீயிட்டு நாசமாக்கியதாகவும் மாவட்ட துணை நிலைக் கமிஷனர் கூறியுள்ளார்.

# தாய்வானுக்கு இட ஒதுக்கீடு ஐ.நாவில் சீனா முறையீடு

(ஜெனிவா)

தாய்வானுக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் இடம் ஒதுக்க வேண்டும் என்று சில உறுப்பு நாடுகள் கோரிக்கை எழுப்பியிருப்பது முறையற்றது என சீனா ஐக்கிய நாடுகள் சபையில் முறைப்பாடு செய்துள்ளது.

சீனா என்பது ஒருநாடுதான் என்றும், சீனாவின் ஒரு மாநிலம் தான் தாய்வான்என்பதும் எல்லோருக்கும் தெரிந்ததே என்று ஐ நா வுக்கான சீனத்தூதுவரால் விநியோகிக்கப்பட்ட கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஐ. நா. செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலியுடன் அவர் பேசுகையில்; மேலும்அண்மையில்முடிவடைந்த பொதுச்சபை விவாதத்தில் சில உறுப்பினர்கள் இரண்டு சீனா இருப்பதாகவும் அதில் ஒன்று தற்போதைய சீனா மற்றது தாய்வான் என்றும் குறிப்பிடும் எல்லைவரை சென்றிருந்தனர். இது தொடர்பாக எமது வருத்தத்தை மட்டுமே தெரிவிக்க முடியும் என்றும் சீனத் தூதுவர் குறிப்பிட்டார்.

ஈழநாதம்

# ஏனையோருக்குள்ள உரிமை விழிப்புலனற்றோருக்குமுண்டு - இரவீந்திரன்

(யாழ்ப்பாணம்)

கழகங்களும், அரசசார் பற்ற மனித நேய ஸ்தாபனங் களும் விழிப்புலனற்றோருக்கு இதுவரை என்ன செய்திருக்கி றோம், இனிமேல் என்ன செய்ய வேண்டும் என்பதினை ஆராய வேண்டும்.

மூன்றாம் உலக நாடுகளில் விழிப்புலனற்றோருக்கு அதிக உதவிகள் தரப்படுவதில்லை. மற்றவர்களுக்கு உரிய உரிமை களும், சுதந்திரமும் விழிப்புல னற்றோருக்கும் உண்டு. கழகங் களும் நிறுவனங்களும்மாத்திர மல்ல தனிப்பட்ட வர்கள் கூட விழிப்புலனற்றோருக்கு எவ்வ ளவோ செய்ய முடியும் என்று யாழ் விழிப்புலனற்றோர் சங் கத் தலைவர் ஆ. இரவீந்திரன் தெரிவித்தார்.

யாழ் பரியோவான் கல்லூரி யில் யாழ் விழிப்புலனற்றோர் சங்கம் யாழ் லயன்ஸ் கழக ஆதரவுடன் நேற்று நடத்திய சர்வதேச வெள்ளைப் பிரம்பு தின விழாவில் பேசும்போதே இரவீந்திரன் இவ்வாறு கூறி னார்.

சமூக சேவைகள் பணிப்பா ளர் திருமதி க. சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது:

கல்வி உரிமை மற்றும் வெளி யுலகத் தொடர்புகள் தேவை களும், உரிமைகளும் விழிப்புல னற்றோருக்கும் உண்டு இவர் களுக்குக் கல்வி உதவி வழங்கி வந்த ஆசிரியை செல்வி சின் னத்தம்பி இளைப்பாறிய பின் ஒரு துறைசார்ந்த ஆசிரியை நியமிக்கப்படவில்லை. ஒருங் கிணைந்த பாடத் திட்டத்தின் கீழ் கல்வி பயிலும் வாய்ப்பு இவர்களுக்கு மறுக்கப்படுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

கல்விக்கு அடுத்ததாக இவர் களுக்குத் தேவைப்படுவது தொழில். வாழ்க்கைக்கான பொருளாதாரத்தை அமைத் துக்கொள்ள விழிப்புலனற் றோருக்குத் தொழில் அவசி யம். மற்றவர்களுக்குத் தொழில் வழங்கப்படும் போதெல்லாம் விழிப்புலனற் றோருக்கு நியமனத்தில் இரண்டு விகிதம் வழங்கப்பட வேண்டும் என்று சுற்று நிருபம் இருக்கிறது. ஆனால் இச்சுற்று நிருபம் கவனிக்கப்படுவதாகத் தெரியவில்லை. இவ்வாறு சமூக சேவைகள் பணிப்பாளர் திருமதி க. சிவசிதம்பரம் மேலும் தெரிவித்தார்.

யாழ் லயன்ஸ் கழகத்தலை வர் சே. இராசேஸ்வரன் நிகழ் ச்சிக்குத் தலைமை தாங்கி னார்.

## மேஜர் முரளி நினைவு உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட மேஜர்முரளி நினைவு விளையாட்டு விழா வில் உதைபந்தாட்டம் மூன் றாம் இடத்திற்கான போட்டி யாழ். மருத்துவ வளாக மைதானத்தில் இன்று மாலை 4-00 மணிக்கு இடம்பெறவுள் ளது.

இப்போட்டியில் புனித சம்பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரி விளையாடும்.

## யாழ். வைத்தியசாலையில் இந். படையின் தாக்குதலில் பலியானோர் நினைவுநாள்

(யாழ்ப்பாணம்)

இந்திய இராணுவத்தினரின் தாக்குதலுக்கு உயிரிழந்த யாழ். ஆஸ்பத்திரியை சேர்ந்த டாக்டர்கள் தாதிகள் சிற் றூழியர்கள் உட்பட 22பேரின் 5-வது ஆண்டு நினைவு நாள் எதிர்வரும் 21, 22-ம் திகதிக ளில் யாழ். வைத்தியசாலை யில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் 22பேரின தும் திருவுருவப்படங்களுக்கு மலர் தூவி மலர்மாலை அணி விக்கும் நிகழ்ச்சியுடன் ஆரம் பமாகிறது 22 சுட்டிகளில் தீப மேற்றப்படவுள்ளது. அத னைத் தொடர்ந்து நினைவு உரைகள் இடம்பெறும் (42)

## வலி வடக்கில் எறிகணை வீச்சு

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் ஏழாலை வடக்கு, தெல்லிப்பழைப் பகுதி குடிமனைகள் மீது பலாலி முகாமிலிருந்து எறி கணைத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது. [11],[09]

## வடபகுதி தபாலக தற்காலிக ஊழியர் வேலை இழக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி தபாலகங்களில் 1988-89 ஆம் ஆண்டு தற் காலிக ஊழியர்களாக நிய மிக்கப்பட்ட ஊழியர்கள் இன் னமும் நிரந்தரமாக்கப்பட வில்லை.

இவர்களை நிரந்தரமாக்கு வதற்கு கொழும்பிலுள்ள உயர் அலுவலகம் தமிழ், கணி தம் ஆகிய பிரதான பாடங் கள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் க. பொ. த. சாதாரண பாட பரீட்சைச் சித்தி இருக்க வேண்டுமென அறிக்கை மூலம் தெரிவித்துள் ளது

ஆனால் வடபகுதியில் இவ் வாறு தற்காலிகமாக நியமிக் கப்பட்டவர்களில் பலருக்கு இக் கல்விச் சான்றிதழ் இல் லாமையால் இவர்களது வேலை பறிபோகக் கூடியதாக உள்ளது.

இச்செய்தியை இலங்கை

## 'மாற்றம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தாய் மன்றத்தின் 'மாற்றம்' காலாண்டு மக்கள் சஞ்சிகையின் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை மாலை 3 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடை பெறவுள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற் சிக் கலாசாலை விரிவுரையா ளர் திரு. காரை. சுந்தரம் பிள்ளை தலைமையில் நடை பெறவுள்ள இந்த வெளியீட்டு விழாவில் மல்லிகை ஆசிரியர் டொமினிக்ஜீவா, அறிவுக் களஞ்சிய ஆசிரியர் வரதர் ஆகியோர் மங்களவிளக்கேற்றி வைக்கவுள்ளனர். தொடர்ந்து வரவேற்புரையை கவிஞர் க. கண்ணதாசனும் நிகழ்த்த வுள்ளார்.

## விதை உருளைக்கிழங்கு பெற உடன் விண்ணப்பிக்கவும்

(மானிப்பாய்)

விதை உருளைக்கிழங்கைப் பெற்றுக் கொள்ள விரும்பும் விவசாயிகள் விரைவாக விண் ணப்பிக்குமாறு உடுவில் கம நலசேவை அதிகாரிகள் வேண் டுகோள் விடுத்துள்ளனர்.

இதுவரைவிண்ணப்பங்களை அனுப்பாத விவசாயிகள் விண் ணப்பத்தினையும், தமக்குத் தேவையான விதை உருளைக் கிழங்கின் அளவையும் அதற் கான பணத்தையும் விரை வில் செலுத்துமாறும் இவ் அதிகாரிகள் கேட்டுக்கொண் டுள்ளார்கள். ஒரு அந்தர் விதை உருளைக்கிழங்கின் விலை 4,000 ரூபா ஆகும். இதுவரை காலமும் சுமார் 30 விண்ணப்பப்படிவங்களே வந்தனவென்றும், அவற்றில் சிலவற்றிற்கான பணம் இன் னும் செலுத்தப்படாமையால் விண்ணப்பப் படிவங்கள் இந் நிலையத்தில் தேங்கிக் கிடக் கின்றன எனவும் இவ் அதிகாரி கள் தெரிவிக்கின்றனர். (07)

## மாவட்ட ரீதியிலான இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டப் பாடசா லைகளுக்கிடையேயான உதை பந்தாட்டப் போட்டிகளில் இன்று 17 வயதுப் பிரிவினர் களுக்கான ஆறு போட்டிகள் மூன்று மைதானங்களில்இடம் பெறவுள்ளன.

கொக்குவில் இந்து மைதா னத்தில் மாலை 3.00 மணிக்கு புனித சாள்ஸ் எதிர் மானிப் பாய் இந்து. 4 00 மணிக்கு அராலி இந்து எதிர் உரும்ப ராய் இந்து.

யாழ் இந்து மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி எதிர் அச்சு வேலி மத்திய மகாவித்தியால யம், 4 00 மணிக்கு ஸ்கந்தவ ரோதயா எதிர் சந்திரபுர ஸ்கந்தவரோதயா, மட்டுவில்.

நெல்லியடி மத்திய மகாவித் தியாலயமைதானத்தில்மாலை 3 மணிக்கு புனித ஹென்றியர சர் எதிர் கரவெட்டி விக்கி னேஸ்வரா, 4 00 மணிக்கு அருணோதயா எதிர் ஹாட் லிக் கல்லூரி.

## கண்விழித்து

அயலவர்களால் வைத்திய சாலைக்கு அழைத்துவரப்பட் டேன் என்றார்.

இதேவேளை இத்தாக்கு

# பஞ்சாப் பொற்கோவில் இந்தியபடையினால் முற்றுகை

(பஞ்சாப்)

பஞ்சாப்பிலுள்ள சீக்கிய பொற்கோயிலை இந்தியப் படையினர் சுற்றி வளைத்துள் ளதாகசெய்திகள்தெரிவிக்கின் றன. முன்னாள் இராணுவ அதிகாரி ஜெனரல் வைத்தி யாவை கொலை செய்ததாக குற்றம் சாட்டி தூக்கிலிடப் பட்ட சீக்கிய தீவிரவாதிகளின் ஞாபகார்த்தமாக சமயநிகழ்ச் சிகள் நேற்று கடும் பாதுகாப் புடன் பொற்கோயிலில் நடை பெற்றது. 1986 இல் சீக்கிய தீவிரவாதிகளினால் ஜெனரல் வைத்தியா கொலை செய்யப்பட்டதாக தெரிவிக் கப்படுகிறது. 1984 இல்பொற் கோயிலில் நடைபெற்ற இரா ணுவ நடவடிக்கைக்கு பழி வாங்கும் முகமாகவே இவர் கொலை செய்யப்பட்டார். இந்நடவடிக்கையின் போது 1000 பேர் படுகொலை செய் யப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

## 'கறுப்புவெள்ளி' அனுஷ்டிக்க அஷ்ரப் கோரிக்கை

(கொழும்பு)

வரும் வெள்ளிக்கிழமையைக் 'கறுப்பு வெள்ளி' என அனுஷ் டிக்க வேண்டும் எனறு முஸ் லிம் மக்களுக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் வேண்டுகோள் விடுத் துள்ளார். அன்றைய தினம் கடைகளைப் பூட்டுமாறும், அரச தனியார் அலுவலகங் களை மூடுமாறும், வீடுகள் தோறும் கறுப்புக் கொடியை பறக்கவிட்டும் வாகனங்களில் வெள்ளைக் கொடியை பறக்க விட்டும் துக்கதினம் அனுஷ் டிக்கும்படி அவர் மேலும் தெரிவித்தார்

தமிழீழ விடுதலைப் புலி களுக்கு இஸ்ரேல் உளவுப் படையான மொஸாட் உதவு வதாகக் குற்றம் சாட்டிய அஷ்ரப், புலிகளுக்கு எதிராக ஜிகாத்தை (புனிதப்போர்) நடத்தத் தயங்கமாட்டோம் என்றும் தெரிவித்தார்.

## ராணுவத்தின் மிதிவெடிக்கு இருவர் காலை இழந்தனர்

(யாழ்ப்பாணம்)

விளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் புதைத் து வைக்கப்பட்டிருந்தபொறி வெடியில் விறகு பொறுக்கச் சென்றவர் சிக்கி தனது இடது காலை இழந்தார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 10 00 மணியளவில் இடம் பெற்றது. மேற்படிசம்பவத்தில் 47 வயதை உடைய க. தெய் வேந்திரம் (கோவில் லேன், நாவாந்துறை] என்பவரே தனது இடது காலை இழந்த வராவர். இதேவேளை அள வெட்டி பகுதியில் நேற்று நண் பகல் மானிப்பாயைச் சேர்ந்த இராமலிங்கம் (32) என்பவர் மிதிவெடியில்சிக்கி காலை இழ ந்தார். (பா)

## 5 குண்டு வீச்சு ஒன்பதுபாரியகுழிகள்; பிளந்த நிலையில் கிணறு

குண்டுவீச்சு நடந்த பகுதி யில் ஒன்பது பாரிய குழிகள் காணப்பட்டன. இக்குண்டு கள் வீடுகளின் பின்புறப்பகுதி களில் வீழ்ந்து வெடித்தமை யால் மதில்கள், மலசலகூடங் கள், கிணறுகள் என்பன முற் றாக அழிந்தநிலையில் காணப் பட்டன. கிணறொன்றின் அருகில் வீழ்ந்துவெடித்தகுண் டினால் அக்கிணறு பிளந்த நிலையில் காணப்பட்டது.

### பயன்தரு மரங்கள் நாசம்

குண்டுவீச்சு நடந்த பகுதி யில் பல பயன்தரு மரங்கள் முறிந்தும், எரிந்தும், கருகி யும் நாசமடைந்துள்ளன. அப் பகுதியில் நின்ற சுமார் 25 தென்னைகள், ஐந்துக்குமேற் பட்ட மாமரங்கள் உட்பட பல பயன்தருமரங்கள் சின்னா பின்னப் படுத்தப்பட்டுள்ளன. ஒரு தென்னைமரத்தின் வட்டு பல யார் தூரம் தூக்கிவீசப் பட்டுக் காணப்பட்டது. ஒரு

### புலிகளின்

விமானங்கள் மூலமாகவும் ஆகாய வழியில் இக்கண்கா ணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், உலங்கு வானூர்திகளும் கண்காணிப் பிற்கு பயன்படுத்தப்பட்டு வரு வதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

பாக்கு நீரிணைப்பகுதியில் சர்வதேச எல்லையைத் தாண் டிச் செல்லும் தமிழக மீனவர் கள்மீது கடுமையான நட வடிக்கை எடுக்கப்படும் என் றும் அவர்களின் உரிமைகள் இரத்துச் செய்யப்படும் என் றும் அவர்தெரிவித்துள்ளார்.

### சந்தேகத்திற்குரிய

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 260 பாடசாலைகள் உள்ளன இரு மாவட்டங்களிலும் சனத் தொகையும் சமமாகவே உள் ளது. ஆனால் அம்பாறை

தீபாவளியை முன்னிட்டு
மலிவு விற்பனை
அகிலன் பாதணி நிலையம்

## உதைபந்தாட்டம்

யாழ் மாவட்ட மேஜர்முரளி நினைவு விளையாட்டு விழாவில் உதைபந்தாட்டம் மூன்றாம் இடத்திற்கான போட்டி யாழ். மருத்துவ வளாக மைதானத்தில் இன்று மாலை 4-00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் புனித சம்பத்திரிசியார் கல்லூரியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரி விளையாடும்.

யில் அனுமதிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் 22பேரினதும் திருவுருவப்படங்களுக்கு

## வலி வடக்கில் எறிகணை வீச்சு

நேற்று முன்தினம் இரவு 8.00 மணியளவில் ஏழாலை வடக்கு, தெல்லிப்பழைப் பகுதி குடிமனைகள் மீது பலாலி முகாமிலிருந்து எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. [11],[09]

## தற்காலிக ஊழியர்

# வேலை இழக்கும் அபாயம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி தபாலகங்களில் 1988-89 ஆம் ஆண்டு தற்காலிக ஊழியர்களாக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் இன்னமும் நிரந்தரமாக்கப்படவில்லை.

இவர்களை நிரந்தரமாக்குவதற்கு கொழும்பிலுள்ள உயர் அலுவலகம் தமிழ், கணிதம் ஆகிய பிரதான பாடங்கள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் க. பொ. த. சாதாரண பாட பரீட்சைச் சித்தி இருக்க வேண்டுமென அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

ஆனால் வடபகுதியில் இவ்வாறு தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களில் பலருக்கு இக் கல்விச் சான்றிதழ் இல்லாமையால் இவர்களது வேலை பறிபோகக் கூடியதாக உள்ளது.

இச்செய்தியை இலங்கை அரசு சுற்றறிக்கை மூலம் விடுத்துள்ளது. இத்தகைமை உள்ளவர்கள் வெகுவிரைவில் நிரந்தரமாக்கப்படவுள்ளனர்.

(42)

அராலி இந்து எதிர் உரும்பராய் இந்து.

யாழ். இந்து மைதானத்தில் மாலை 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி எதிர் அச்சுவேலி மத்திய மகாவித்தியாலயம், 4 00 மணிக்கு ஸ்கந்தவரோதயா எதிர் சந்திரபுர ஸ்கந்தவரோதயா, மட்டுவில்.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயமைதானத்தில்மாலை 3 மணிக்கு புனித ஹென்றியரசர் எதிர் கரவெட்டி விக்கினேஸ்வரா, 4 00 மணிக்கு அருணோதயா எதிர் ஹாட்லிக் கல்லூரி.

## கண்விழித்து

அயலவர்களால் வைத்தியசாலைக்கு அழைத்துவரப்பட்டேன் என்றார்.

இதேவேளை இத்தாக்குதலை நேரில் பார்த்த ஒருவர் அதுபற்றி தெரிவிக்கையில் வீட்டின் பின்புறமாக இருந்த வளவிற்குள் இரண்டு குண்டுகள் ஒரே தடவையில் வீழ்ந்து வெடித்தபோது அப்பகுதி முழுவதும் ஒரே புகைமண்டலமாகக் காட்சியளித்தன இப்புகைமண்டலம் அடங்குவதற்குள்ளேயே அடுத்தடுத்து குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. சுமார் பத்து நிமிடங்கள் வரை இப் புகைமண்டலம் காணப்பட்டது என்றார்.

## பதுங்குகுழிகள் சேதம்.

வீடுகளில் இருந்த பதுங்குகுழிகள் பலகாலமாக பயன்படுத்தப் படாதிருந்தமையால் அவை தூர்ந்து கிடந்ததுடன் மழைநீரும் உட்சென்றிருந்தது அப்படி இருந்தும் அப்பதுங்குகுழியின் வாசல் பகுதியில் இருந்தே இத் தாக்குதலை அவதானித்தேன் என்றார்.

(ச, பா)

கள் வீடுகளின் பின்புறப்பகுதிகளில் வீழ்ந்து வெடித்தமையால் மதில்கள், மலசலகூடங்கள், கிணறுகள் என்பன முற்றாக அழிந்தநிலையில் காணப்பட்டன. கிணறொன்றின் அருகில் வீழ்ந்துவெடித்தகுண்டினால் அக்கிணறு பிளந்த நிலையில் காணப்பட்டது.

## பயன்தரு மரங்கள் நாசம்

குண்டுவீச்சு நடந்த பகுதியில் பல பயன்தரு மரங்கள் முறிந்தும், எரிந்தும், கருகியும் நாசமடைந்துள்ளன. அப்பகுதியில் நின்ற சுமார் 25 தென்னைகள், ஐந்துக்குமேற்பட்ட மாமரங்கள் உட்பட பல பயன்தருமரங்கள் சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளன. ஒரு தென்னைமரத்தின் வட்டு பல யார் தூரம் தூக்கிவீசப்பட்டுக் காணப்பட்டது. ஒரு கோழிக்கூட்டில் அடைத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 20 கோழிகள் சிதறிக் காணப்பட்டன. (பா) (09) (11)

வருவதாகவும், உலங்கு வானூர்திகளும் கண்காணிப்பிற்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாக்குநீரிணைப்பகுதியில் சர்வதேச எல்லையைத் தாண்டிச் செல்லும் தமிழக மீனவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர்களின் உரிமைகள் இரத்துச் செய்யப்படும் என்றும் அவர்தெரிவித்துள்ளார்.

## சந்தேகத்திற்குரிய

மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இரு மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் சுமார் 260 பாடசாலைகள் உள்ளன இரு மாவட்டங்களிலும் சனத்தொகையும் சமமாகவே உள்ளது. ஆனால் அம்பாறை மாவட்டத்தில் 850 பேருக்கு தொண்டர் ஆசிரியர்நியமனம் வழங்கப்பட்டிருக்கிறது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## பெரும் நிதி

வங்கியும் மொத்தம் 200 ஆடைத் தொழிற்சாலைகளில் 160 தொழிற்சாலைகளில் முதலீடு செய்ய இணங்கியுள்ளன. தேசிய அபிவிருத்தி வங்கியும், அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனமும் ஏற்கனவே 20 விகித முதலீட்டைச் செய்துள்ளன. இதற்குமேல் தம்மால் உதவ முடியாதென இந்த வங்கிகள் தெரிவித்துள்ளன.

ஹட்டன் நஷனல் வங்கி, கமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி, சைலன் வங்கி ஆகிய வங்கிகளிலேயே நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.


தீபாவளியை முன்னிட்டு

## மலிவு விற்பனை

## அகிலன் பாதணி நிலையம்

உங்களுக்குகந்த வகையில்........

ஆடவர் — சிறுவர், சிறுமியர்

நங்கையர் — குழந்தைகள்

அனைவர் தேவைகளுக்கும் சகாய விலையில் நவீன ரக பாதணிகள்

அனைத்துக்கும்

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

யாழ் நகரில் ......

# அகிலன் பாதணி நிலையம்

112/ 1, பெரியகடை - யாழ்ப்பாணம். (சி5248)


உ

சிவமயம்

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கீரச வருடம் ஐப்பசி மாதம் 7-ம்நாள் (23-10-92) வெள்ளிக்கிழமை காலை 6.02 மணி முதல் 9.00 மணி வரையுள்ள சுபமுகூர்த்தவேளையில்

| | |
|---|---|
| எமது ஏக புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**நித்தியானந்தன்**<br>[லொறி ஆனந்தன்]<br>அவர்களுக்கும் | எமது கனிஷ்ட புத்திரி<br>திருநிறை செல்வி<br>**ராகினி**<br>அவர்களுக்கும் |

நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காமசுவாமி ஆலய மண்டபத்தில், திருவருள் துணையால் இனிதே நடைபெறவிருக்கும் திருமண விழாவில் தாங்களும் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

(தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை)

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

சி. கிருஷ்ணபிள்ளை தம்பதிகள்,
புன்னாலைக்கட்டுவன் வீதி,
அச்செழு, நீர்வேலி.

சி. நடனசிவராசா தம்பதிகள்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(இரு வீட்டார் அழைப்பு) (3463)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
29-10-1968



மறைவு
30-10-1991

சபாபதிப்பிள்ளை மங்களேஸ்வரன்

நேற்றுப்போல் இருக்கிறது;
நீ இருந்தது
போன இடம்!
காற்றுப் போற் சுழன்று,
எங்கள்
கனவுகளில் உழன்று;
ஊற்றுப் போற் சுரந்தவனின்
உயிரை நாம் பார்த்திருக்க,
வீதியிலே வைத்து
விழுங்கியதோ விபத்து!

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

தங்கள் பிரிவால் துயருறும்
சக ஊழியர்கள்

(3490)

## மரண அறிவித்தல்

### உயர் திரு. தம்பு சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்)

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், ஸ்கந்தபுரத்தை வசிப்பிடமாகவும்கொண்ட கொப்பிறட்டியார் என அன்பாக அழைக்கப்படும் உயர் திரு. தம்பு சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) 17-10-92 (சனிக்கிழமை) அன்று காலமானார். அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும், திருமதி பவளராசேஸ்வரி சுந்தரலிங்கம், முருகானந்தன் - பவானந்தன் (கிராம சேவை அலுவலரும், செயலாளர் செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி பிரிவு) நகுலேஸ்வரி குணானந்தன் அவர்களின் அன்புத் தந்தையும், திரு. இ. சுந்தரலிங்கம் (முகாமையாளர் காந்தி விவசாயப்பண்ணை) அவர்களின் அன்பு மாமனும், அருணா, வருணா ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் 18-10-92 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 12.00 மணிக்கு ஸ்கந்தபுரம் மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

தகவல்:
இ. சுந்தரலிங்கம்
(மருமகன்)

ஸ்கந்தபுரம்.
[3489]

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

### 18-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 6164

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்!

27-6887, 43-1019, 42-1320, 27-9489, 24-4560, 42-9220
43-0916, 26-6075, 26-3633, 24-4190, 26-1583, 41-8292,
28-0587, 43-1887, 26-5244, 24-5794, 27-1637, 26-3321
42-9326, 40-7299, 26-4874, 22-5857, 24-0207, 26-7652.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

26-0536, 40-2394, 28-1730, 41-9327, 26-5846, 22-8855,
42-3727, 27-1939, 42-2397, 24-3364, 22-7956 41-9480,
24-5679, 22-8835, 41-5599, 26-4683, 28-1414, 26-6361,
26-4450, 42-1059, 42-7312, 24-5721, 28-2145, 26-5517.


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 19ம் திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது